සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved History

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

| தரம் - 9 | வரலாறு |
|---|---|

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

## பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **1 – 5 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. ஒல்லாந்தருடன் உடன்படிக்கை மேற்கொண்ட மலையக மன்னர்கள்,
1. முதலாம் விமலதர்ம சூரியன், இரண்டாம் இராஜசிங்கன்.
2. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், இரண்டாம் விமலதர்ம சூரியன்.
3. இரண்டாம் இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்.
4. இரண்டாம் விமலதர்ம சூரியன், செனரத் மன்னன்.

02. இரண்டாம் சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பிரதேசம்,
1. வெல்லஸ்ஸ 2. தும்பர 3. மாத்தளை 4. கண்டி

03. மிஷனரி இயக்கங்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்காக அச்சிட்ட வெளியீடுகளில் ஒன்று அல்லாதது,
1. மாசிக்க தேக்க
2. லக்மினி பஹன
3. உரகல
4. லங்கா நிதானய

04. இந்தியப் பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்ட ஐரோப்பிய இனத்தவர்களுள் முழு இந்தியாவையும் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தவர்கள்,
1. பிரான்ஸியர்
2. போர்த்துக்கேயர்
3. ஒல்லாந்தர்
4. பிரித்தானியர்

05. கி.பி. 1953 ஆம் ஆண்டு ஹர்த்தால் காரணமாக பிரதமர் பதவியை இராஜினாமா செய்தவர்,
1. டட்லி சேனாநாயக்க
2. S.W.R.D. பண்டாரநாயக்க
3. D.S. சேனாநாயக்க
4. ஜோன் கொத்தலாவல

- **6 – 10 வரையான வினாக்களுக்கு அடைப்பினுள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

06. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆளுநர் ..... என்பவரால் கன்னொருவ பிரதேசத்தில் தமது சொந்தக் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்தார்.

07. 1947 ஆம் ஆண்டு ..... அரசியல் யாப்பில் ஆளுநர் நாயகம் எனும் பதவி தோற்றுவிக்கப்பட்டது.

Past Papers Wiki

08. முஸ்லிம்களை அறிவூட்டுவதற்காக அறிஞர் சித்திலெப்பை அவர்கள் ..... எனும் பெயரில் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டார்.

09. விவசாயிகளின் நலனையும் மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு 1911 ஆம் ஆண்டு ஆளுநர் ..... என்பவர் கூட்டுறவுச் சங்க இயக்கத்தை ஆரம்பித்தார்.

10. மகாவலி அபிவிருத்தித்திட்டத்தை செயற்படுத்தும் முதல் நிலையாக மகாவலி கங்கைக்குக் குறுக்காக அணைகட்டி ..... திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஹென்றி வோட் / முஸ்லிம் நேசன் / எட்வட் பாண்ஸ் / சோல்பரி / உதய பானு / டொனமூர் / மக்கலம் / விக்டோரியா / ஜோஜ் பர்ட் / பொல்கொல்ல)

- **11 – 15 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் முன்னால் அடைப்பினுள் இடுக.**

11. இந்தியாவின் பெண் பிரதமராக விளங்கிய இந்திரா காந்தி ஜவஹர்லால் நேரு என்பவரின் புதல்வியாவார். (.....)

12. 1818 சுதந்திரக் கிளர்ச்சியின் தலைவர் வீரபுரன் அப்பு என்பவராவார். (.....)

13. இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி J.R. ஜயவர்தன ஆவார். (.....)

14. தெங்குச் செய்கையின் விருத்திக்கும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் தலவாக்கலையில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. (.....)

15. காலி ரிச்மண்ட் வித்தியாலயம் பிரம்மஞான சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. (.....)

- **16 – 20 வரையான வினாக்களுக்கு இடைவெளிக்குப் பொருத்தமான விடைகளை எழுதிப் பூரணப்படுத்துக.**

16. சிங்கோனா செடியிலிருந்து மலேரியா நோய்க்கான ..... எனும் மருந்து உற்பத்தி செய்யப்பட்டது.

17. இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடியாகச் செயற்பட்ட ..... அவர்கள் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள பௌத்த வழிபாட்டு இடங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்.

18. ஒல்லாந்தரின் நீதிமன்றத்தொகுதியில் கீழ்நிலை நீதிமன்றமொன்றாக ..... செயற்படுகிறது.

19. 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ..... இலங்கையின் முதலாவது பலநோக்கு அபிவிருத்தித் திட்டமாகும்.

20. இந்திய சுதந்திரப் போராட்டத்தை அஹிம்சை வாதப் போராட்டமொன்றாக மாற்றியவர் ..... ஆவார்.

(2x20=40 புள்ளிகள்)

## பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயம்.**
- **பகுதி II இலிருந்து 4 வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் 5 வினாக்களுக்கு விடையளிக்க.**

(01) அ) i. இந்த நிர்மாணத்தைப் பெயரிடுக.




ii. இது அமைந்துள்ள நகரத்தைப் பெயரிடுக.

iii. இங்கு கையொப்பமிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எழுத்தாவணம் யாது?

iv. தற்பொழுது இந்நிர்மாணத்திற்கு அண்மையில் அமைந்துள்ள வணக்கஸ்தலம் யாது?

(4 புள்ளிகள்)



ஆ) i. உருவிலுள்ள நபர் யார்?


ii. இவர் அங்கத்துவம் வகித்த அரசியல் கட்சி எது?

iii. இவரின் தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு எது?

iv. இவ்வரசியல் யாப்பின் படி இவர் வகித்த பதவி யாது?

(4 புள்ளிகள்)

இ) i. பின்வரும் உலகப்படத்தில் ஆங்கிலேயரின் தாய்நாடான பெரிய பிரித்தானியாவைக் குறித்து நிற்கும் எழுத்து யாது?




ii. ஐரோப்பியருக்கு முன் இலங்கையில் வர்த்தக ஏகாதிபத்தியத்தைக் கொண்டிருந்த முஸ்லிம்களின் நிஜபூமியான அரேபிய தேசத்தைக் குறித்து நிற்கும் எழுத்து யாது?


iii. பிரான்ஸியர் வர்த்தகக் களஞ்சியமொன்றை ஏற்படுத்திய பிரதேசம் F எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. அதனைப் பெயரிடுக.

iv. ஒல்லாந்தரின் கீழைத்தேய வர்த்தக மத்திய நிலையமான பத்தேவியா G எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. இது அமைந்துள்ள தீவு யாது?

(4 புள்ளிகள்)

- **பின்வரும் இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**

ஈ) i. நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் மேலதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒல்லாந்தரால் புனர்நிர்மாணம் செய்த குளம் B எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. இக்குளத்தின் பெயர் என்ன?




ii. கோல்புறூக் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட மத்திய மாகாணத்தின் நிருவாக மையம் G எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. இதனைப் பெயரிடுக.

iii. ஒல்லாந்தர் உயரமான இடங்களில் பீரங்கிகளைப் பொருத்தி போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட கோட்டையைக் குறிப்பிடும் எழுத்து யாது?

iv. ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய அதிகளவில் கருவா விளையும் பிரதேசம் C எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. இதனைப் பெயரிடுக.

(4 புள்ளிகள்)

(02) i. பின்வரும் A, B, C என்பவற்றுக்குரிய விடைகளை ஒழுங்குமுறையில் தருக.

A - தற்போதைய சீயம் நிக்காய ஆரம்பிக்கப்பட்ட கண்டி இராச்சிய மன்னன் யார்?

B - ஒல்லாந்தர் தமது சமயத்தைப் பரப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்ட விசேட நிறுவனம் யாது?

C - ஆசியாவில் ஒல்லாந்தரின் நிருவாகம் சம்பந்தமாக தீர்மானம் மேற்கொள்ளும் பிரதான சங்கம் யாது? (3 புள்ளிகள்)

ii. ஒல்லாந்தர் இந்நாட்டிலிருந்து கொண்டு சென்ற வர்த்தகப் பொருட்கள் 4 குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. ஒல்லாந்தர் ஆட்சி காரணமாக இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட சமூக பண்பாட்டு அம்சங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(03) i. கி.பி. 1848 சுதந்திரக் கிளர்ச்சி சம்பந்தமாக கேட்கப்பட்டுள்ள பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - புதிய வரிகளை விதித்த ஆளுநர் யார்?

B - மலையக மன்னனாக தம்புள்ளையில் முடி சூடிக்கொண்ட நபர் யார்?

C - இராணுவ நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட போராட்டத் தலைவர் யார்? (3 புள்ளிகள்)

ii. பிரித்தானியர் இந்நாட்டின் பெருந்தோட்டச் செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணப்பட்ட பொருளாதார முறையின் இரு பண்புகளை சுருக்கமாக குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பிரித்தானியர் இந்நாட்டில் பயிரிடப்பட்ட பொருளாதாரப் பயிர்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அதில் ஒன்று எவ்வாறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையாக வளர்ச்சியுற்றது என்பதற்கு செல்வாக்குச் செலுத்திய விதத்தினை விளக்குக. (4 புள்ளிகள்)

(04) i. இந் நாட்டின் பௌத்த மறுமலர்ச்சி சம்பந்தமாக கேட்கப்பட்டுள்ள பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

A - அச்சகம் ஒன்றை நிறுவ நடவடிக்கை மேற்கொண்ட தேரர் யார்?

B - இந்த அச்சகத்தின் பெயர் யாது?

C - இந்த அச்சகம் நிறுவப்பட்ட நகரம் யாது? (3 புள்ளிகள்)

ii. பின்வரும் தகவல்களுக்குரிய நபர்களை இனங்கண்டு எழுதுக.

A - பௌத்த போதனைகளை கருவாகக் கொண்ட நாடகங்களை எழுதியவர் யார்?

B - இந்நாட்டில் இஸ்லாமிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த பாடுபட்ட எகிப்து நாட்டவர் யார்?

C - கொழும்பு ஸாஹிராக் கல்லூரியை ஆரம்பித்தவர் யார்?

D - பேலியகொட வித்தியாலங்கார பிரிவெனாவை ஆரம்பித்தவர் யார்? (4 புள்ளிகள்)

iii. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தில் வெளிப்படையாகத் தெரியும் பண்புகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(05) i. பின்வரும் A, B, C என்பவற்றினால் தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை கீழுள்ள அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

A - இந்திய தேசிய சங்கத்தின் முதல் தலைவர் யார்?

B - இந்தியாவின் இறுதி ஆங்கிலேய ஆளுநர் யார்?

C - சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் யார்?

(மவுன் பேட்டன் பிரபு/ ஸ்ரீ ஜவஹர்லால் நேரு/ தாத்தாபாய் நவரோஜி) (3 புள்ளிகள்)

ii. 19ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இந்தியாவில் தோற்றம் பெற்ற சமய கலாசார இயக்கங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

iii. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைவரான மகாத்மா காந்தி இந்நாட்டு விவசாயிகள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு வழங்கப்பட்ட தீர்வுகள் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(06) i. பின்வருவன எந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் விளைவுகளாகும் என்பதைக் குறிப்பிடுக.

A - கட்டாய இராஜகாரிய முறையை நீக்குதல்.

B - சட்டவாக்கக்கழகத்திற்கு கல்வி கற்ற இலங்கையர் சார்பாக அங்கத்துவம் கிடைத்தல்.

C - இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்ற முறை ஏற்படுத்தல். (3 புள்ளிகள்)

ii. கோல்புறூக் ஆணைக்குழுவுக்கு தேடியறியும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்த இரு துறைகளையும் குறிப்பிட்டு, இங்கு பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருந்த இரு நபர்களையும் பெயரிடுக.
(4 புள்ளிகள்)


iii. பிரித்தானிய ஆட்சி முறையில் மாற்றங்களை வேண்டி போராட்டங்களை முன்னெடுத்த ஐரோப்பிய தலைவர்கள் இருவரையும், உள்நாட்டு தலைவர்கள் இருவரையும் குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)

(07) i. சுதந்திரத்தின் பின் இலங்கை பற்றிய பாட விளக்கத்தினூடாக பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.



A

1. A - இவ்வுருவிலுள்ள நீர்த்தேக்கம் யாது?
2. B - இந்நீர்த்தேக்கத்தை உருவாக்கிய அபிவிருத்தித்திட்டம் யாது?
3. C - இதன் மூலம் எதிர்பார்த்த நோக்கமொன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)



B



C

4. B, C என்பவற்றினூடாகக் காட்டப்பட்டுள்ள இரு நபர்களுள் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற பிரதமர் B எனும் எழுத்தால் தரப்பட்டுள்ளது. இவரின் பெயர் யாது?
5. இவரின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கிய நடவடிக்கையொன்றைக் குறிப்பிடுக.
6. இந் நபர்களுள் ஒருவர் இலங்கையில் நெல் உற்பத்தியை விருத்தி செய்ய விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவரின் பெயர் யாது?
7. இவரால் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றத்திட்டமொன்றைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)



D



E

8. மேலுள்ள உருக்களுள் இலங்கையின் உயர் நீதிமன்றத்தைக் காட்டும் உருவைத் தெரிவு செய்து அதன் பெயரைக் குறிப்பிடுக.
9. இந்நிறுவனத்தின் தலைவர் யார்?
10. இலங்கையில் மிக முக்கியமான பல்கலைக்கழகமொன்று E எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. இதன் பெயர் யாது?
11. சுதந்திரத்தின் பின் கல்வித்துறையை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையொன்றைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

Past Papers Wiki

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025 **பாடம்** - வரலாறு (History)

விடைப்பத்திரம் - தரம் - 9

## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 6. எட்வட் பாண்ஸ் | 11. ✓ | 16. குவினைன் |
| 2. 3 | 7. சோல்பரி | 12. X | 17. அநாகரிக தர்மபால |
| 3. 2 | 8. முஸ்லிம் நேசன் | 13. ✓ | 18. பிஸ்கால் |
| 4. 4 | 9. மெக்கலம் | 14. X | 19. கல்ஓயா |
| 5. 1 | 10. பொல்கொல்ல | 15. X | 20. மகாத்மா காந்தி |

## பகுதி – II

(01)

அ) i. கண்டி அரசசபை (மகுல் மடுவ) ii. கண்டி
iii. 1815 கண்டி உடன்படிக்கை iv. தலதா மாளிகை

ஆ) i. ஜே. ஆர். ஜயவர்தன ii. ஐக்கிய தேசியக் கட்சி
iii. 1978 அரசியல் யாப்பு iv. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி

இ) i. D ii. E
iii. பாண்டிச்சேரி iv. ஜாவா

ஈ) i. யோத வாவி ii. கண்டி
iii. F iv. காலி

(02) i. A - கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன்
B - இஸ்கூல்
C - VOC சங்கத்தின் அதிகாரிகள் குழு

ii. பாக்கு, முத்து, யானைத்தந்தம், மிளகு, சாதிக்காய்

iii.
- புரட்டஸ்தாந்து சமயம் பரவுதல்.
- உரோமக் கட்டடக்கலை பரவுதல்.
- பலவித உணவு வகைகள்.
  உ + ம் - கேக், அச்சாறு, கொக்கிஸ்
- நீதிமன்ற முறை
- பல ஒல்லாந்த சொற்கள் பரவுதல்.

(03) i. A - ரொரிங்டன்
B - கொங்காலே கொட பண்டா
C - புரன் அப்பு/ டிங்கிரால/ கடஹபொல தேரர்

ii.
- கிராமிய சுயதேவைப் பொருளாதாரம்
- சேற்றுநிலப் பயிர்ச்செய்கை, விலங்கு வளர்ப்பு, விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், ராஜகாரிய முறை

iii. கோப்பி, சிங்கோனா, தேயிலை, தேங்காய், இறப்பர்

(04) i. 1 - விக்டோரியா நீர்த்தேக்கம்
2 - மகாவலி
3 - விவசாய நடவடிக்கை/ நீர் மின்சார உற்பத்தி வேலை வாய்ப்பு
4 - S.W.R.D. பண்டாரநாயக்க
5 - சிங்கள மொழியை அரசகரும மொழியாக மாற்றுதல், துறைமுகம், போக்குவரத்து அரச துறையாக மாற்றுதல், தேசிய கைத்தொழில் மற்றும் விவசாயத்தை விருத்தி செய்தல்.
6 - D.S. சேனாநாயக்க
7 - கல்ஓயா, கந்தளாய், இரணைமடு, மினிப்பே, பதவியா, ராஜாங்கனை
8 - உச்ச நீதிமன்றம்
9 - பிரதம நீதிபதி
10 - பேராதனை பல்கலைக்கழகம்
11 - (143ம் பக்கம் - பாடநூல் பார்க்கவும்)

(05) i. A - புலத்கம தம்மாலங்கார ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரர்
B - லங்கோபகார
C - காலி
ii. A - ஜோன் த சில்வா
B - ஒராபி பாஷா
C - M. C. சித்திலெப்பை
D - இரத்மலானை ஸ்ரீ தம்மாலோக தேரர்
iii. பிரிவெனாக்கள் அமைத்தல், அச்சகங்களை நிறுவுதல், விவாதங்களை நடத்துதல், பௌத்த பாடசாலைகளை நிறுவுதல், தேசிய கலாசாரத்தை பாதுகாத்தல்.

(06) i. A - W. C. பர்னாஜி
B - மவுண் பெடன் பிரபு
C - ஸ்ரீ ஜவஹர்லால் நேரு
ii. பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம், அகமதியா, அலிகார்
iii. சாம்பரட் இயக்கம், கேடா இயக்கம்

(07) i. A - கோல்புறூக் கமரன் சீர்த்திருத்தம்
B - குறுமக்கலம் யாப்புச் சீர்த்திருத்தம்
C - சோல்பரி யாப்புச் சீர்த்திருத்தம்
ii. • பொருளாதார மற்றும் நிர்வாக நடவடிக்கை W.M.G. கோல்புறூக் அவர்கள்
• நீதிசார் நடவடிக்கை சம்பந்தமாக ஆராய்தல் - சார்ள்ஸ். கே. கமரன்
iii. ஐரோப்பிய தலைவர்கள் :- வில்லியம் டிக்பி, ஜோஜ் வோல்
இலங்கைத் தலைவர்கள் :- பொன்னம்பலம் ராதநாதன்
பொன்னம்பலம் அருணாச்சலம்
ஜேம்ஸ் பீரிஸ்
H.G.C. பெரேரா

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank